# தமிழுக்கு அணிமணிகள்!

**உ**லகத்தமிழ்ச் செம்மொழி தமிழ் மாநாட்டில் தலைமை உரையாற்றினார் முதல்வர் கருணாநிதி.

அவர் பேசும்போது, "தடைக்கற்கள் பல போடப்பட்டாலும், அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு தமிழகத்தின் மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் கொண்டுள்ள அன்பின் காரணமாகவும், பற்றின் காரணமாகவும் வருகை தந்துள்ள தங்களுக்கு உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்களின் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். 14 வயதில் மாணவர் போராட்டத்திலே ஈடுபட்டு அடியெடுத்து வைத்த நான் இன்று வரை தமிழன்னைக்கு இயன்ற வழியனைத்தும் முனைந்து, இடையறாது பணியாற்றி அணிமணிகள் பலவும் தேடிக்கொணர்ந்து சூட்டி வருகிறேன். இதுவரை உலகத்தமிழ் மாநாடு என்ற பெயரில் எட்டு மாநாடுகள் நடைபெற்றுள்ளன. முன்னர் நடந்த எட்டு மாநாடுகளுக்கும், இப்பொழுது நடைபெறுகிற இந்த மாநாட்டுக்கும் வேறுபாடு உண்டு. முன்னர் நடந்தவை உலகத் தமிழ் மாநாடுகள். இப்பொழுது நடைபெறுவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு. தமிழ்மொழி அதன் தொன்மையாலும், தனித்தன்மையாலும், முதன்மைச் சிறப்பினாலும் உலக முதல் தாய்மொழியாக உலகத் தமிழாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு மொழி செம்மொழியாக்கப்படுதற்கு இன்னின்ன தகுதிகள் வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது. தொன்மை, தனித்தன்மை, பொதுமைப்பண்பு, நடு நிலைமை, தாய்மைத் தன்மை, மொழிக்கோட்பாடு, இலக்கிய வளம், உயர்சிந்தனை, பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு ஆகிய பதினோரு தகுதிகளை ஒரு மொழி பெற்றிருந்தால்தான் அது செம்மொழியாகும். இந்தத் தகுதிகளுக்கு எல்லாம் மேலான மேன்மையான தகுதிகளைப் பெற்ற மொழிதான் தமிழ்மொழி" என்றார்.

கற்காலக் கருவிகளான கைக்கோடரி, வட்டு, மண்வெட்டி, கல் சுத்தி, வாள், வில், அம்புகள், அரிவாள்கள், வேட்டைக் கருவிகள், ஆதி காலத்துப் பெண்களின் அணிகலன்கள் போன்றவற்றையும் தத்ரூபமாகக் காட்சிக்கு வைத்துள்ளார்கள். இந்த அரங்கைப் பார்ப்பவர்கள் கற்காலத்துக்கே சென்றுவிடுவார்கள்.

இவற்றைத் தொடர்ந்து உலகளவில் இருந்து வந்துள்ள தமிழறிஞர்கள் பங்கேற்கும் ஆய்வரங்குகள், பொலிவரங்கம் போன்றவையும் மாநாட்டு நிகழ்ச்சிகளில் இடம்பெற்றுள்ளன. அழகு மணம் வீசும் வகையில் மூலிகை மலர்களின் புகைப்படங்களும் இக்கண்காட்சியை அலங்கரிக்கின்றன.

தமிழுக்காக தன்னுயிரையும் தந்த சான்றோர், புலவர் பெருமக்களின் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. மாநாடு நடைபெறும் நாட்களில் வெளிநாட்டு பார்வையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இக்கலை நிகழ்ச்சிகளில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளான பறையாட்டம், கரகாட்டம், கைச் சிலம்பாட்டம், ஒயிலாட்டம், சேவையாட்டம், காவடியாட்டம், கோலாட்டம், குறவன் குறத்தியாட்டம், பொய்க்கால் குதிரை, கிராமியப் பாடல்கள், இவற்றோடு புகழ்மிக்க நாட்டுப்புறக் கலைஞர்களின் நாட்டியங்கள், நடனங்கள் போன்றவையும் இடம்பெறுகின்றன.





சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், பாதுகாப்புப் பணிக்கு மட்டும் பஞ்சமா இருக்கும்? பாதுகாப்பு பணியில் மட்டும் சுமார் பதினோறாயிரம் போலீசார் ஈடுபட்டுள்ளனர். இரண்டு ஐ.ஜிக்கள், எட்டு டி.ஐ.ஜிக்கள், 33 எஸ்.பிக்கள், இவர்களோடு டி.ஜி.பி., ஏ.டி.ஜி.பி. என மொத்த காவல்துறையும் இம்மாநாட்டில் முகாமிட்டுள்ளது. மாநாட்டின் மிக முக்கியமான அலங்கார ஊர்திப் பேரணியில் மட்டும் சுமார் ஐயாயிரம் போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாநாட்டின் ஏழு பிரதான நுழைவாயில்கள் மற்றும் பக்கவாட்டில் உள்ள இரு பதுக்கும் மேற்பட்ட வாயில்களில் ஆயிரக்கணக்கான போலீஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

மாநாட்டுக்கு வரும் வெளிநாட்டவர்கள் தங்கியுள்ள ஓட்டல்களில் டி.ஐ.ஜி. அல்லது எஸ்.பி தலைமையில் போலீசார் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டுள்ளார்கள். வெளிநாட்டு வி.ஐ.பி. க்களை மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லும் விதமாக சபாரி உடையணிந்த 600க்கும் மேற்பட்ட இன்ஸ்பெக்டர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். உணவரங்கம், ஆய்வரங்கங்கள், கண்காட்சி அரங்குகள் என திரும்பிய பக்கமெல்லாம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் இருக்கின்றனர்.

இதுபோக மாநாட்டு நிகழ்ச்சிகளில் மஃப்டியில் மட்டும் ஆயிரத்துக்கும் அதிகமான போலீமார் பணியில் உள்ளனர். மிக முக்கியமாக பலூன் காமிரா, உளவு விமானம் போன்றவை பாதுகாப்பின் உச்சகட்டம்.

அன்னைத் தமிழின் மேன்மையை உலகுக்கு உணர்த்தும் விதத்தில் அரங்கேறியுள்ளது இந்த செம்மொழி மாநாடு.

மாநாடு துவங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே தமிழ் நெஞ்சங்களும், பொதுமக்களும் பல்லாயிரக்கணக்கில் சாரை சாரையாக குடும்பத்துடன் வந்து மாநாட்டுப் பணிகளையும் அரங்கங்களையும் பார்த்துச் சென்றது முதல்வர் கலைஞரை மட்டுமல்ல.... அத்தனை கலைஞர்களையும் சந்தோஷத்தில் ஆழ்த்தியிருக்கிறது. ஆக அனைத்துத் தரப்பையும் இந்த மாநாடு ஈர்த்துள்ளது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

**படங்கள்: ஒலம்பஸ் ஹரி**